# நாலும் இரண்டும் காட்டும் கல்வி

*கு. அன்பரசி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்

மலர்: 4

இதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2019

ISSN: 2454-3993

கல்வி என்பது ஒருவரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான அச்சாணி ஆகும். ஒருவர் பெறுகின்ற கல்வி அறிவு மட்டுமே யாராலும் அழிக்கமுடியாத செல்வமாகும். மனித இனத்திற்குக் கல்வி பொதுவானதாக அமைகிறது. இதனைத் திருக்குறளில் திருவள்ளுவரும் நாலடியாரில் சமண முனிவர்களும் சிறப்பாகக் கூறியுள்ளனர். ஆனாலும் அவற்றில் சில முரண்பாடுகள் உள்ளன.

**திருக்குறள் - நாலடியார் கூறும் கல்வி**

நாலடியாரிலும், திருக்குறளிலும் அற்புதமான கருத்துக்களை வள்ளுவரும், சமணமுனிவர்களும் எடுத்துரைத்துள்ளனர் ஆவர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறளும் நாலடியாரும் கல்வி குறித்து அற்புதமான பதிவுகளைச் சொல்வது மட்டுமல்லாமல் அக்காலப் பின்னணியையும் சுட்டுகின்றன.

**கல்வி கற்கும் முறை**

கல்வியை கற்கின்றபோது நிறைய நூல்கள் இருக்கின்றன. அதில் எது சிறந்ததோ அந்தப் புத்தகங்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் படியுங்கள் எனக் காலத்தின் தேவை கருதி கூறப்படுகிறது. குறளிலும் நாலடியாரிலும் இதே கருத்து முன் வைக்கப்படுகிறது.

> ***"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்***
> ***நிற்க அதற்குத் தக"***

**(*திருக்குறள்-கல்வி-391*)**

> ***"கல்வி கரையில கற்பவர் நாள்சில***
> ***மெல்ல நினைகைகின் பிணபல - தெள்ளிதின்***
> ***ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்***
> ***பால் உண் குருகின் தெரிந்து"***

**(*நாலடியார்-135 பாடல்*)**

இந்த இரண்டு செய்யுட்களை ஊற்று நோக்கும்போது பல்வேறு சிந்தனைகள் உருவாகுகின்றன. ஒருவன் படிக்க ஆரம்பிக்கும்போது நல்ல நூல் "அல்லாத நூல் என்பதனை எதனைப் பார்த்துத் தேர்தெடுப்பது அல்லது கல்வி அறிவு பெற்ற ஒருவனால் இந்த நல்ல நூல்கள் ஆற்றுப்படுத்தப்படுகின்றனவா? "பால் உண்" குருகின் தெரிந்து என்ற அடி எந்தப் பாலை உணர்த்துகிறது? இதில் பல வகையான பறவைகள் இருக்கும்போது அன்னப்பறவையை மட்டும் சுட்டடக் காரணம் என்ன? அந்தக் காலத்தின் அரசியல் பின்னணியா? இவ்வளவு ஐயங்கள் சிறந்த வழிகாட்டியாக இருக்க முடியுமா?

**கல்வி அழகே அழகு**

ஒருவரின் புறத்தோற்றத்தைவிட அவன் பெற்றிருக்கும் கல்வி அறிவே சிறந்த அழகாகும்.

***"கண் உடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண் உடையர் கல்லாதவர்" என்கிறார் (குறள்-393)***

***"குஞ்சி அழகும் கொடுந்தனைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"***

***(நாலடியார் 131)***

நிழலுக்குக் கூட பள்ளிக்கூடம் ஒதுங்காதவர்கள் கூட சிறந்த ஆளுமை, முற்போக்குச் சிந்தனை, நடுநிலையாக இருக்கின்றனர்கள். அப்படி இருக்க கல்வி கல்லாதவர்கள் எப்படி புண் உடையவராக மாறியிருக்க முடியும் புறத்தழகும் ஒரு மனிதனைப் பல்வேறு மாறுதல்களுக்கு உட்படுத்துகிறது. சமண சமயத்தின் கொள்கையை மக்களிடம் திணிக்கும் பொருட்டு நடந்தத் சமய திணிப்பு கலந்த கல்வி கருத்தாக அமைகிறது. இவ்வளவு பெரிதாகப் பேசப்படும் கல்வி, இன்றைய சூழலில் கொலைவாளாக அவதாரம் எடுத்துள்ளது.

**புலவர் தொழில்**

கல்வியில் புலமை பெற்ற புலவர்கள் மகிழும்படியாகக் கூடி பழகி பிரியும் போது வருத்தத்தைத் தருவதே புலவர் தொழிலாகும்.

***"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"***

***குறள் 394***

கல்வியில் புலமை படைத்த அனைவரும் அதில் சிறப்புப் பெற்ற சான்றோர்களும் வள்ளுவர் மனநிலையில் இருப்பதில்லை. மாறாகத் தான் கூறும் கருத்துதான் சரி பிறர் கருத்துக்களை ஏற்காத மனநிலை, அவ்வாறு அச்சமயம் ஏற்றுக் கொண்டாலும், அதைப் பற்றிய தவறான விமர்சனங்கள், அறிவிற்கும் வயதிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் அதனைச் சுட்டுக்காட்டும் விதமான பல தரப்பில் புலவர்களின் எண்ண ஓட்டங்கள் உள்ளன. உண்மைத்தன்மையை மறைத்துப் போலியாகத்தான் இன்று புலவர் தொழில் அமைகின்றது என்பதே உண்மையாகும். அப்படி இருக்க வள்ளுவர் இக்கருத்தை எந்தவகையில் முன் வைக்கிறார்?

**கல்வியில் தீண்டாமை**

தீண்டாமை என்ற சொல் ஒரு மனிதனின் உடல் சார்ந்த கூறுகளாக மட்டும் அல்லாமல் உணர்வு சார்ந்த, அறிவு சார்ந்த கூறுகளைச் சிதைக்கும் பெரிய ஆயுதமாகும்.

***"களர்நிலத்துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்" (நாலடி-133)***

**"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்
அவன் துணையா ஆறுபோயற்றே நூல் கற்ற
மகன் துணையா நல்ல கொளல்"**

**(நாலடி136)**

உப்பு என்பது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சிறிய பொருள். அது நாவிற்குச் சுவையை அளவோடு தரும் பொருளாகும். இந்த உப்பின் வடிவம் என்பது ஒரேமாதிரியாக இருப்பதில்லை அது நீரில் கரைந்து சுவையைச் கூட்டுகிறது. அது போலத்தான் கீழ்மக்கள் செய்யக்கூடிய எந்த ஒரு செயலுக்கும் முதன்மை கிடையாது என்பது இதனோடு மறைந்து காணக்கூடிய பொருளாகும். இந்தத் தீண்டாமை மனித இனம் உருவாகியதில் இருந்து மாறுதல்களுக்கு உட்பட்டு மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேரு இருக்கிறது என்பதே உண்மை.

### கல்வியில் பதவி ஆசை

கல்வி அறிவின் இன்னொரு படிநிலையே ஆசையென்று கூறலாம். அரசர் காலக்கட்டத்தில் எல்லா பயிற்சி பெற்றவனே, சிறந்த அரசன் என்ற நிலை வருகின்றபோது அவன் மனதில் ஆசைபிறக்கிறது. கற்பனையில் இந்தநாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் எப்படி மக்களை (தீய-நல்ல) வழியில் கொண்டு செல்லுதல் போன்ற திட்டமிடலை அரசன் சிந்திக்கின்றன. இந்தச் சிந்தனை பல மாற்று வடிவங்களாக மக்களிடையே பிரதிபலிக்கிறது.

**"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் - குறள்-399"**

என்ற வள்ளுவர் கூற்றுப்படி எந்த நிலையும் இல்லை. ஆசிரியரைத் தாண்டிய வளர்ச்சி மாணவனுனடயது என்பதனையே ஏற்றுக்கொள்ள முடியாத அளவில் இருக்கக் கூடியவர்களாகத்தான் இன்றைய சூழலில் இருக்கின்றார்கள். இன்றைய சூழலில் பிறர் கல்வியில் மேன்மை அடைந்திருப்பதைக் கூறும் அளவிற்குகூட மனம் இல்லாத அறியாமை இருளில் மூழ்கி இருக்கின்றனர். காமுறுவர் எதற்காக இவர்களை வீழ்த்தி நாம் எப்படி அந்நிலைக்கு வருவதென்று

**"கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சோதலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு"**

**- 139 நாலடியார்**

இன்றைய சனநாயகத்தின் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய கல்விப் பிரச்சினைகள் வேதனையை அளிக்கக்கூடியன. சமண முனிவர்கள் கூறும் கற்றோர், கல்லாதோர் போல் இல்லை. பாதிரிப்பூ, பானைக்கும் தண்ணீருக்கும் வாசனை தரும். அது போலத்தான் இன்றைய அரசியல், கல்வி, நிறுவனங்களின் முன்னேற்றமும் இருக்கின்றது. தவறான செயல்களால் மனிதாபிமானத்தை இழந்து தான் கூறுவதே சரியோ தவறோ என்பதனைக் கருத்தில் கொள்ளாது பதவி ஆசைக்காக எந்த முடிவுகளையும் எடுக்க தயராக இருக்கிறது இச்சமூகம்.

### கல்விச் செல்வம்

செல்வத்துள் சிறந்த செல்வம் கல்வி. அக்கல்வியை வியாபாரமாக விற்பதே இன்றைய சுழலில் சிறந்த செல்வமாக கருதப்படுகிறது.

**"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை" - 400**

**வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற - (நாலடியார் 134)**

ஒருவன் கல்வி கற்றுவிட்டால் அதனைத் தாண்டிய செல்வமே இல்லை என்றும், அடுத்து வரும் சந்ததியினரை

மேன்மைப்படுத்தும் என நாலும் (நாலடியார்) இரண்டும் (திருக்குறளும்) கூறுகின்றன. ஆனால் இன்றைய சூழலில் பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற நிலையும் ஏழ்மையாக வாழ்பவனின் அறிவைத் தட்டிப்பறித்திடுதடும் ஆதிக்கமும் இருக்கின்றன.

***"யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவர்***
***சாந்துணையும் கல்லாதவாறு" - 397***

கல்வி அறிவு பெற்றுவிட்டால் நாம் எல்லா ஊர் நாடுகளுக்கு செல்லலாம் என வள்ளுவர் சிறப்பாகக் கூறுகிறார் ஆனால் இன்று கல்வி நிலையங்களில் நடக்கும் சம்பவங்கள் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக மாற்றுகின்றன. ஊர் விட்டு சென்றாலும் நாம் யார் என்பதனைக் கல்வி நிலைநிறுத்துவதில்லை. இச்சமுதாயம் தான் தீர்மானிக்கிறது.

இவற்றையெல்லாம் நோக்கும் போது எல்லாவற்றிலும் முன்னேறிக் கொண்டு செல்கிறோம் எனப் பெருமைப்படும் ஒவ்வொரு வினாடியும் எதிர்காலத்தை எதிர்கொள்ள முடியாத சூழலுக்கு ஆட்படுகிறோம். என்பதே உறுதியானது. இங்கு கல்வி என்பது இலட்சியத்தைக் கனவாக வைத்திருப்பவருக்குக் கிடைப்பதில்லை. இலட்சங்களுக்கு விலைபோகிற இன்றைய சூழலில் மறைமுகப் பொருளாதாரத் தீண்டாமையை உணர்த்துகிறது.